**(Chapter XXII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**CUDDALORE DISTRICT, CUDDALORE**
**C.C.No. 206 of 2023**

அரசுதரப்பு **11 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கபிலன் | வயது | : 37 |
| தந்தை பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : முதுநிலை பட்ட மேற்படிப்பு மாணவர் |
| கிராமம் | : நல்லாத்தூர் | ஜாதி | :-------- |
| தாலுக்கா | : கடலூர் | சமயம் | : |
| மாவட்டம் | : கடலூர் | மொபைல் | : 9943813094 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 29.07.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

(எதிரி முன்னிலை**,** வழக்கறிஞர் முன்னிலை**)**

முதல் விசாரணை**:**

நான் தற்சமயம் முதியோர் நலமருத்துவத்தில் முதுநிலை பட்ட மேற்படிப்பு மாணவராக தேசிய முதியோர் நல மையம், கிண்டி, சென்னையில் உள்ளேன். கடந்த 29.07.2022 அன்று கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது மாலை 06.05 மணியளவில் கிள்ளிவளவன் வயது 19, த/பெ. சரவணன், ஆலை தெரு, பழைய வண்டிபாளையம் , கடலூர் என்பவரை தமிழ்செல்வன் என்ற அவரது உறவினர் கிசிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரித்த போது அவர் அன்றைய தினம் மாலை 04.00 மணியளவில் கடலூர் கேவி டெக்ஸ் சாலை விபத்தில் காயம்பட்டதாக கூறினார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. வலது முழங்காலில் ஒன்றுக்கும் மேற்பட்ட சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

2. வலது கால் முட்டியில் சிராய்ப்பு காயம் 4X5X1 cm அளவில் காணப்பட்டது.

3. வலது இடுப்பு பகுதியிலும், இடது தோள்பட்டையிலும் வலி இருப்பதாக கூறினார்.

**மேற்கண்ட இடங்களில் அவரால் அசைக்க முடியவில்லை என்று கூறினார். அவரை பரிசோதிக்கும்போது சுயநினைவுடன் இருந்தார். அவரது ரத்த அழுத்தம் 110/70 ஆக இருந்தது.** அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு வலது தோள்பட்டை மற்றும் வலது இடுப்பு ஆகியவற்றிற்கு எக்ஸ்ரே எடுத்து பரிசோதிக்க பட்டது. அவருக்கு எலும்பு முறிவு எதுவும் இல்லை. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அ**.**சா**.**ஆ**.10** ஆக குறியீடு செய்யப்பட்டது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

விபத்து பதிவேட்டில் காயம்பட்ட நபர் மது அருந்தி இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை-இல்லை**.**</u>

(ஒம்.இரா.தனம்)
தலைமை நீதித்துறை நடுவர்,
கடலூர்